பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

06 04 2026 MONDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது. ** 5 ஆயிரத்து 72 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2. தமிழக மக்கள், குடும்ப ஆட்சிக்கும் ஊழலுக்கும் எதிராக உள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

3. சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றிபெறும் என்று காங்கிரஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

4. சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் குற்றவாளிகள் 9 பேருக்கும் மரண தண்டனை விதித்து மதுரை கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

5. ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Nikhat Zareen வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

5 ஆயிரத்து 72 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக, கரூர் தொகுதியில் 105 மனுக்களும், குறைந்தபட்சமாக குறிஞ்சிப்பாடியில் 5 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும்.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் வியாழக்கிழமை கடைசி நாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்

வாக்குப்பதிவு 23ஆம் தேதி நடைபெறும், வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 4ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

இதற்கிடையே, வாக்குப்பதிவு தினத்தன்றும், அதற்கு முந்தைய நாளும், தேர்தல் ஆணையத்தின் ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுவின் ஒப்புதல் இன்றி, அரசியல்

கட்சிகள் நாளிதழ்களில் விளம்பரங்களை வெளியிடக்கூடாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவிடம் இதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

சுயேச்சை வேட்பாளர்கள் மாவட்ட அளவிலான குழுவிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

திமுக அரசின் சாதனைகளும், வாக்குறுதிகளும் அனைத்து தரப்பினரையும் சென்றடைந்துள்ளதாக அக்கட்சி தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், திமுக தேர்தல் அறிக்கை மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடு நன்கொடை சட்டதிருத்த மசோதாவை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

திமுக அவதூறு பிரச்சாரத்தில் ஈடுபடுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று பெரம்பலூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், தாங்கள் நிறைவேற்றிய திட்டங்கள் குறித்து பேச இயலாத திமுக, தனிநபர் விமர்சனங்களில் ஈடுபடுவதாக குறை கூறினார்.

இந்த தேர்தலில், குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழக மக்கள், குடும்ப ஆட்சிக்கும் ஊழலுக்கும் எதிராக உள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

இன்று அவினாசியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வளர்ச்சி வேண்டும் என்று வாக்காளர்கள் விரும்புவதாக கூறினார்.

இதன் காரணமாக, இந்த சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கோவிட் பாதிப்பு காலத்தில், அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்த அஇஅதிமுக சிறப்பாக செயல்பட்டதாகவும் அவர் கூறினார்.

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாகவும் திரு. கிஷன் ரெட்டி குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

சட்டப்பேரவை தேர்தலில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றிபெறும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இன்று ஸ்ரீபெரும்புதூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசின் கடந்த ஐந்தாண்டு கால சாதனைகளை எடுத்துரைத்து, தங்கள் கூட்டணி வாக்கு சேகரிக்கவுள்ளதாக கூறினார்.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி ஆகியோரும் தமிழகத்தில் பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளதாக திரு. செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஊழலை ஒழிக்க தங்களுக்கு வாய்ப்பளிக்குமாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று புதுச்சேரியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், ஊழலற்ற நிர்வாகத்தை தமது கட்சி வழங்கும் என்றார்.

புதுச்சேரியை சிறந்த சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வேளாண் துறையின் வளர்ச்சிக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் திரு. சீமான் கூறினார்.

>>>>>><<<<<<<

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில், குற்றவாளிகள் 9 பேருக்கும் மரணதண்டனை விதித்து, மதுரை கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கினை விசாரணை செய்த நீதிபதி திரு. முத்துக்குமரன் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

விசாரணைக்காக காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று, தந்தை, மகன் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்புடைய காவல்துறையைச் சேர்ந்த 9 பேர் குற்றவாளிகள் என்று கடந்த 23ஆம் தேதி தீர்ப்பளித்த நீதிபதி, இன்று தண்டனை விவரங்களை அறிவித்தார்.

>>>>>><<<<<<<

சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி. சுஜாதா சர்மா, நாள்தோறும் 50 லட்சம் சிலிண்டர்கள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்வது, 97 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்வதற்காக OTP கோரும் நடைமுறை செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுமுறை நாட்களிலும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக திருமதி. சுஜாதா சர்மா கூறினார்.

>>>>>><<<<<<<

*நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அருகே, மலைக்கரட்டு குகைக்குள் சென்ற சிறுவனை, தீயணைப்புத்துறையினர் பாதுகாப்பாக மீட்டனர்.*

*இரவு நேரம் முழுவதும் காவல்துறையினரும், தீயணைப்புத் துறையினரும் ஒருங்கிணைந்த நடவடிக்கை மேற்கொண்டு சிறுவனை மீட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - கண்ணன் 39 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்கநர் டாக்டர் வி.ஆர். துரை கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் துரை 49 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*மாவட்டச் செய்திகள்*

*திருப்பத்தூர் மாவட்டத்தில் தேர்தலின் போது, பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் வகையில், காவல்துறையினரின் கொடி அணிவகுப்பு இன்று நடைபெற்றது.*

*>>>>>><<<<<<*

*மயிலாடுதுறை மாவட்டத்தில் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.*

*>>>>>><<<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Nikhat Zareen வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*மங்கோலியாவின் Ulaanbaatar-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 51 கிலோ எடைப் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*மகளிர் 54 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் Preeti Pawar - கொரியாவின் Im Ae-ji-யை 5-0 என்ற புள்ளிக்கணக்கில் வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறினார்.*

*மகளிர் 70 கிலோ எடைப் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் Arundhati Choudhry 4-1 என்ற புள்ளிக்கணக்கில் உஸ்பெகிஸ்தானின் Oysha Toirova-வை வென்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றார்.*

*மகளிர் 60 கிலோ எடைப் பிரிவில் Priya Ghanghas-ம் இறுதியாட்டத்திற்கு முன்னேறினார்.*

*>>>>>><<<<<<*

*ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Lalit இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*கிர்கிஸ்தானின் Bishkek -ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 11-3 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவின் Huoying Shi-யை வென்றார்.*

*ஆடவர் 77 கிலோ எடைப்பிரிவில் Aman-னும், 87 கிலோ எடைப்பிரிவில் Sunil Kumar-ம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>>><<<<<<*

*ஐ.சி.சி-யின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருதுக்கு இந்தியாவின் Sanju Samson, Bumrah ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.*

*>>>>>><<<<<<*

*டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் மகளிர் பிரவில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் 383-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.*

***>>>>>>END<<<<<<***